# ஜமாஅத் பொறுப்பாளர்களின் பொறுப்புகள்

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது
கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா
பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 15 ஜூலை 2016
அன்று லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரை

**வெளியிடுவோர்**
**நஸாரத் உலியா சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான்**

Book Name : Uhdedaaraan Jama'at ki Zimmaadaariyaan

Tamil Translation: M. Nizamuddin

First Edition : 2017

Copies : 1000

Published By : Nazart Uliya Sadr Anjuman Ahmadiyya Qadian-143 516 Dist. Gurdaspur, Punjab, India.

Organized By : Nazarat Nashr-o-Ishaat, Qadian

Printing at : Fazle Umar Printing Press, Qadian

♦ அமீர்மார்கள், ஜமாஅத் தலைவர்கள், ஏனைய பொறுப்பாளர்கள் மற்றும் முபல்லிக்மார்களுக்கு மிகவும் முக்கியமான வழிகாட்டல்

♦ எவர்களிடம் ஜமாஅத் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதோ அவர்கள் எப்போதும் உண்மையில் நிலைத்திருந்தவாறு தங்களது தக்வாவின் தரத்தை உயர்த்தியவாறு தமது பணிகளை நிறைவேற்ற வேண்டும். இது அவரிடம் இருக்க வேண்டிய அடிப்படையான தனிச்சிறப்பாகும்.

♦ தர்பிய்யத் துறை துடிப்புடன் செயல்பட்டால் ஏனைய துறைகளின் பணி தாமாகவே நடைபெறும்.

♦ தர்பிய்யத் பணியை முதலில் தமது வீட்டிலிருந்து துவங்க வேண்டும். அது தர்பிய்யத் செயலரின் வீடு மட்டுமல்ல. மாறாக, செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு வீடும் இதில் அடங்கும். செயற்குழு எல்லாவற்றையும் விட அதிகமாக தமக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும். ஜமாஅத்தின் அமீர், ஜமாஅத் தலைவர் மற்றும் தர்பிய்யத் செயலர் ஆகியோர் எந்த நிகழ்ச்சிகளை தயார் செய்தாலும் அவற்றை முதலில் தமது செயற்குழு செயல்படுத்துகின்றதா ? இல்லையா ? என்பதை பார்க்க வேண்டும். இறைவனின் அடிப்படையான கட்டளைகள் மற்றும் மனித படைப்பின் நோக்கத்தை செயற்குழுவின் உறுப்பினர்கள் நிறைவேற்றுகின்றனரா ? என்றும் பார்க்க வேண்டும்.

♦ அல்லாஹ்விற்குரிய உரிமையில் மிகப்பெரிய உரிமை அவனை வணங்குவதாகும். அதற்காக ஆண்களுக்கு தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்ற கட்டளை உள்ளது. தொழுகைகளை நிலைநாட்டுவது என்பது ஜமாஅத்தான தொழுகையை நிறைவேற்றுவதாகும். எனவே அமீர்களும், ஜமாஅத் தலைவர்களும், பொறுப்பாளர்களும் தங்களது தொழுகைகளை பாதுகாத்தவாறு அதை நிலை நிறுத்தவும் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றவும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். நமது ஒவ்வொரு பொறுப்பாளரிடமும் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதின் உணர்வு இருக்க வேண்டும். அது அல்லாமல் நம்பி ஒப்படைக்கப்பட்டவற்றிற்கான உரிமையை செலுத்துபவர்களாக அவர்கள்

ஆக முடியாது. இதைப் பற்றியே திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் போதனை செய்யப்பட்டுள்ளது.

♦ இதைத்தவிர இன்னும் சில விஷயங்களின் பக்கம் பொறுப்பாளர்கள் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். இந்த விஷயங்கள் மக்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் மற்றும் ஜமாஅத் நபர்களுடன் பொறுப்பாளர்கள் நடந்து கொள்ளும் விதம் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும்.

♦ பொறுப்பாளர்களிடம் குறிப்பாக இருக்க வேண்டிய இன்னொரு பண்பு பணிவை மேற்கொள்வதாகும்.

♦ தத்தமது வட்டத்தை புரிந்து கொள்வதற்காக பொறுப்பாளர்கள் ஜமாஅத்தின் விதிமுறைகள் மற்றும் சட்ட திட்டங்களை படித்து புரிந்து கொள்வது அவசியமானதாகும்.

♦ பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய இன்னொரு சிறப்பம்சம், தனக்கு கீழுள்ளவர்களிடம் அழகிய முறையில் நடந்து கொள்வதாகும்.

♦ எவரது உள்ளத்திலும் எனது அனுபவமும், அறிவும் தான் ஜமாஅத்தின் பணிகளை நடத்திச் செல்கின்றது என்ற எண்ணம் இருக்கக் கூடாது. அவ்வாறே எனது அனுபவமும், அறிவும் தான் ஜமாஅத் பணிகளை நடத்த முடியும் என்ற எண்ணமும் இருக்கக் கூடாது. ஜமாஅத்தின் பணிகளை இறைவனின் அருளே நடத்திக் கொண்டிருக்கிறது.

♦ பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய இன்னொரு பண்பு, மலர்ந்த முகத்துடனும் நல்லொழுக்கத்துடனும் மக்களுடன் நடந்து கொள்வதாகும்.

♦ பொறுப்பாளர்கள் குறிப்பாக அமீர்மார்கள், ஜமாஅத் தலைவர்கள், தர்பிய்யத் துறையில் இருப்பவர்கள், தீர்ப்பு கூறுகின்ற துறையில் இருப்பவர்கள் ஆகியோர் மீது இந்த மிகப்பெரும் பொறுப்பு இருக்கின்றது. அவர்கள் மக்களுக்காக எளிதான நிலைமைகளை உருவாக்குவதற்குரிய வழிமுறையை பற்றி சிந்திக்க வேண்டும். ஆனால் அல்லாஹ்வின்

கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டவாறு இந்த வழிமுறையை கடைபிடிக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

♦ அமீர்மார்கள், ஜமாஅத்தின் தலைவர்கள், ஜமாஅத்தின் செயலர்கள் ஆகியோர் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி இதுவாகும். அதாவது தலைமையகத்திலிருந்து என்ன வழிகாட்டல் வருகின்றதோ அல்லது சுற்றறிக்கைகள் அனுப்பப்படுகின்றதோ அவற்றில் கூறப்பட்டிருப்பதற்கேற்ப உடனடியாக முழு கவனத்துடன் செயல்பட வேண்டும். அவற்றை ஜமாஅத்துகள் மூலமாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

♦ நினைவில் கொள்ள வேண்டும். தனது சந்தாக்களை முறையாக செலுத்துவதுடன் அவற்றிற்கான கணக்கை வைத்திருப்பது வஸிய்யத் செய்த ஒவ்வொருவரது பொறுப்பாகும். இவ்வாறே தலைமையக அலுவலகமும் இத்துறையுடன் தொடர்புடைய செயலர்களும் ஒவ்வொரு வஸிய்யத் செய்தவரின் கணக்கையும் முழுமையாக வைத்திருக்க வேண்டும். இது அவர்களின் பணியாகும். தேவைப்படும் போது அவர்களின் சந்தாக்களின் நிலை எப்படி இருந்து வருகிறது என்பதைப் பற்றி அவர்களுக்கு நினைவூட்டவும் வேண்டும். உள்ளூர் ஜமாஅத்திலுள்ள செயலர்களை துடிப்புடன் செயல்பட வைப்பது தேசிய ஜமாஅத்தின் பணியாகும். வஸிய்யத் செய்த ஒவ்வொருவரும் அவர்களுடன் தொடர்பில் இருந்து வர வேண்டும்.

♦ அல்லாஹ் அனைத்து பொறுப்பாளர்களுக்கும் அவர்கள் தமது எல்லா தகுதிகளையும் பயன்படுத்தியவாறு சிறந்த முறையில் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அதிகம் அதிகமாக பணிகளை நிறைவேற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக. வரக்கூடிய மூன்று வருடங்கள் தொண்டாற்றும் வாய்ப்பை அல்லாஹ் இவர்களுக்கு வழங்கியுள்ளான். தமது சொல்லாலும் செயலாலும் ஜமாஅத்திற்கு முன்மாதிரியாக திகழும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 15 ஜூலை 2016 அதாவது 15 வஃபா 1395 ஹிஜ்ரி ஷம்ஸி அன்று லண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரை

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ـ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ـ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ـ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ـ

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ـ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ـ

இது ஜமாஅத் பொறுப்பாளர்களின் தேர்தலுக்கான வருடம் என்று சில காலத்திற்கு முன்பு நான் ஒரு குத்பாவில் கூறியிருந்தேன். இப்போது பெரும்பாலான இடங்களில் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. நாட்டிலும் சரி, உள்ளூர் ஜமாஅத்துகளிலும் சரி, புதிய பொறுப்பாளர்கள் தமது பணியை நிர்வகிக்க ஆரம்பித்து விட்டனர். பொறுப்பாளர்களுள், சில இடங்களில் சில அமீர்மார்கள், சில தலைவர்கள் மற்றும் சில பொறுப்பாளர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், பெரும்பாலான இடங்களில் முதலில் பணி செய்தவர்களே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். புதிதாக வந்தவர்களும் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ் அவர்களை ஜமாஅத்தின் பணிக்காகத் தேர்ந்தெடுத்துள்ளான். அதே வேளையில், அவர்கள் பணிவுடன் அல்லாஹ்வுக்கு முன்னால் குனிந்தவர்களாக அல்லாஹ்விடம் உதவி கேட்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த அமானத்தின் உரிமையைச் செலுத்துவதற்கு வாய்ப்பு வழங்குவானாக!

அதேபோன்று மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்களும் அல்லாஹ் அவர்களுக்கு மீண்டும் பணி செய்யும் வாய்ப்பினை வழங்கியதற்கு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அதே வேளையில்

அல்லாஹ்விடம் தாழ்மையான முறையில் துஆவும் கேட்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு எல்லாத் திறமைகளுடனும் இந்த அமானிதத்தின் உரிமையைச் செலுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குவானாக!

மேலும் தொண்டு செய்த சென்ற காலகட்டத்தில் அவர்களிடம் என்ன குறைபாடுகள், சோம்பேறித்தனங்கள், கவனக்குறைவுகள் ஏற்பட்டனவோ, அவற்றின் காரணமாக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த உரிமையை அவர்களால் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டதோ அல்லாஹ் அதை கண்டும் காணாமல் விட்டுவிடுவானாக. மேலும் தன் அருளை வழங்கியவாறு இனி வரும் மூன்று ஆண்டுகளுக்கு மீண்டும் தொண்டு செய்வதற்கான வாய்ப்பை அவன் வழங்கி இருக்கிறான்.

எனவே, அவர்களிடம் என்ன அமானிதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளவோ அவற்றில் இனி வரும் காலத்தில் சோம்பேறித்தனங்கள், குறைபாடுகள், கவனக்குறைவுகள் இருக்கக்கூடாது. மேலும் அல்லாஹ் அந்த அமானிதங்களின் உரிமையை நிறைவேற்றும் நல்வாய்ப்பை வழங்குவானாக.

நினைவில் கொள்ளுங்கள்! ஜமாஅத்தின் சேவையை ஒரு சாதாரண சேவை என்று கருத வேண்டாம். மேலோட்டமாகப் பார்க்க வேண்டாம். நம்மில் ஒவ்வொருவரும் அவர் பொறுப்பாளராக இருந்தாலும் சரி, அவர் ஒரு சாதாரண அஹ்மதியாக இருந்தாலும் சரி, மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை தருவதாக அவர் ஓர் உறுதிமொழி எடுத்துள்ளார். ஒரு மனிதர் மார்க்கத்திற்கு சேவை செய்தாக அல்லது பொறுப்பாளராக ஒரு பணி செய்வதாக ஒப்புக் கொண்டாலோ அல்லது ஒரு தொண்டில் நியமிக்கப்பட்டாலோ அவருக்கு மற்றவரை விட அதிகமான பொறுப்பு இருக்கிறது. அவர் தனது உறுதிமொழியை அதிகமாக நிறைவேற்ற வேண்டும். நினைவில் கொள்ளுங்கள்! அவர் இந்த உறுதிமொழியை இறைவனுடன் செய்துள்ளார். தனது உறுதிமொழியை நிறைவேற்றுமாறு திருக்குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் கூறியுள்ளான். ஆகவே எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் மிக தெளிவாக கூறியிருப்பது என்னவென்றால் நீங்கள் ஏற்றுக் கொண்ட உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதம் என்பது நீங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழி ஆகும். ஆகவே உங்கள் மீது ஒப்படைக்கப்பட்ட அமானிதம்

மற்றும் நீங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழி ஆகியவற்றை நிறைவேற்றுங்கள்.

ஓரிடத்தில், அல்லாஹ் தனது கூற்றின் மீது உண்மையுடனும் தக்வாவுடனும் செயல்படுபவர்களுக்கு இந்த அடையாளத்தைக் கூறியுள்ளான். அதாவது, وَالْمُوْفُوْنَ بِعَهْدِهِمْ اِذَا عٰهَدُوْا அவர்கள் உறுதிமொழி எடுக்கும்போது தங்கள் உறுதிமொழியை நிறைவேற்றுவார்கள் **(2:178)**. எனவே, ஓர் அடிப்படை வித்தியாசம் தெரிய வேண்டும். குறிப்பாக ஜமாஅத் பணிகளைச் செய்பவர்களிடம் இது காணப்பட வேண்டும். அவர் எப்போதும் உண்மையின் மீது நிலைநின்றவாறு தமது தக்வாவின் தரத்தை உயர்த்தியவாறு தமது பணியை மேற்கொள்ள வேண்டும். அவர்களின் உண்மையின் தரத்தில் சிறிதேனும் குறை இருந்தால், அவர்களின் தக்வாவின் தரம் ஒரு சாதாரண ஜமாஅத் நபருக்கு ஒரு முன்மாதிரியாக இல்லையென்றால் அவர் தனது உறுதிமொழி, பொறுப்பு மற்றும் தனது அமானிதத்தின் உரிமையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை. எனவே, அமீர்மார்கள், சதர்மார்கள் எல்லாவற்றிற்கும் முதலில் தமது முன்மாதிரியை நிலைநாட்டுங்கள். தமது செயற்குழுவின் முன்னாலும் சரி ஜமாஅத் நபர்களின் முன்னாலும் சரி தர்பிய்யத் செயலர்களிடம் தர்பிய்யத் கொடுக்கும் பணி உள்ளது. தர்பிய்யத் பணி முன்மாதிரி நிலைநாட்டப்படும் போதுதான் சிறந்த முறையில் நடைபெற முடியும். பணி செய்பவர், பொறுப்பாளர் மற்றவருக்குப் போதனை செய்பவர் தாமும் அதன்படி செயல்படுபவராக இருக்க வேண்டும். தர்பிய்யத் செயலர்களும், ஜமாஅத் நபர்களுக்கு முன் தமது முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். அவர்களிடம் ஜமாஅத்தின் தர்பிய்யத் பொறுப்பு இருக்கிறது.

நான் பல சந்தர்ப்பங்களில் கூறியுள்ளேன். தர்பிய்யத் துறை செயல் துடிப்புடன் இருந்தால் பெரும்பாலான பிற துறைகளின் பணிகளும் தாமே நடக்க ஆரம்பித்து விடுகின்றன. எந்த அளவுக்கு ஜமாஅத் நபர்களின் தர்பிய்யத் தகுதி உயர்ந்தாக இருக்குமோ அந்த அளவுக்கு மற்ற துறைகளின் பணிகள் எளிதாக இருக்கும். உதாரணமாக, செகரட்டரி மால் –ன் பணி எளிதாக இருக்கும். உமூரே ஆமா செயலரின் வேலை எளிதாக இருக்கும். தப்லீக் செயலரின் பணி எளிதாக இருக்கும். அதேபோன்று பிற துறைகளின் – கஸாவின் பணிகள் எளிதாக இருக்கும்.

அநேகமாக, பல்வேறு இடங்களில் செயற்குழுக் கூட்டங்களில் நான் கூறி வந்துள்ளேன். தர்பிய்யத் பணியை முதலில் உங்களது வீட்டிலிருந்து தொடங்குங்கள். வீடு என்பது தர்பிய்யத் செயலரின் வீடல்ல. மாறாக, செயற்குழுவிலுள்ள ஒவ்வொருவரின் வீடாகும். செயற்குழு, எல்லாவற்றிற்கும் மேல் முதலில் தமக்கு தர்பிய்யத் கொடுக்க வேண்டும்.

ஜமாஅத்தின் அமீர், ஜமாஅத் தலைவர் மற்றும் தர்பிய்யத் செயலர் ஆகியோர் எந்த நிகழ்ச்சிகளை தயார் செய்தாலும் அவற்றை முதலில் தமது செயற்குழு செயல்படுத்துகின்றதா ? இல்லையா ? என்பதை பார்க்க வேண்டும். இறைவனின் அடிப்படையான கட்டளைகள் மற்றும் மனித படைப்பின் நோக்கத்தை செயற்குழுவின் உறுப்பினர்கள் நிறைவேற்றுகின்றனரா ? என்றும் பார்க்க வேண்டும். இல்லை எனில் தக்வா இல்லை. அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய கடமைகளில் எல்லாவற்றையும் விட பெரியது இறை வணக்கமாகும். ஆண்கள் தொழுகையை நிலைநாட்ட வேண்டும் என்று கட்டளை உள்ளது. தொழுகையை நிலைநாட்டுவது என்பது ஜமாஅத்துடன் தொழுகையை நிலைநாட்டுவதாகும்.

எனவே, அமீர்மார்கள், தலைவர்கள், பொறுப்பாளர்கள் ஆகியோர் தமது தொழுகைகளைப் பாதுகாத்து, அதனை ஜமாஅத்துடன் நிறைவேற்ற முழுமையாக முயற்சி செய்யுங்கள். இதனால் எங்கெல்லாம் நமது பள்ளிவாயில்களும் தொழுகை மையங்களும் நிரப்பப்படுமோ அங்கு அவை அல்லாஹ்வின் அருள்களைப் பெறுபவையாகவும் இருக்கும். மேலும் தமது செயல் முன்மாதிரியால் ஜமாஅத் அன்பர்களுக்கு தர்பிய்யத் கொடுப்பவர்களாகவும் இருப்பார்கள். அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாகவும் இருப்பார்கள். அவர்களின் பணிகள் எளிதாகவும் ஆகிவிடும். அவர்கள் வெறுமனே வாய்ப்பேச்சு பேசுபவர்களாக இருக்க மாட்டார்கள். எனவே, எந்த அளவுக்கு அவர்களின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்கின்றன? என பணியாற்றுபவர்கள் முதலில் தம்மை ஆய்வு செய்ய வேண்டும்.

அல்லாஹ் கூறுகின்றான்: يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ لِمَ تَقُولُونَ مَا لَا تَفْعَلُونَ – நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் செய்யாததை ஏன் சொல்கிறீர்கள்? **(61:3)**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உலகத்தில், தான் கூறி விட்டு அதனை தானே செய்யாதவர்கள் இருந்தனர்; இருக்கின்றனர்; இருப்பர் என்று இந்த வசனம் கூறுகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் எனது வார்த்தையைக் கேட்டு நன்றாக நினைவில் வையுங்கள். மனிதனது உரையாடல்கள் உண்மையான உள்ளத்துடன் இல்லை எனில் செயல் ஆற்றல் அதில் இல்லை எனில் அது தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்காது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 67 இங்கிலாந்து வெளியீடு 1985)

நினைவில் கொள்ளுங்கள். செயல் இல்லாமல் வாயளவிலான வார்த்தைகளும் பேச்சுக்களும் வேலைக்கு உதவாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 77 இங்கிலாந்து வெளியீடு 1985)

செயல் இல்லாமல் வார்த்தைகள் இருக்குமென்றால் அல்லாஹ்விடத்தில் அதற்கு எந்த முக்கியத்துவமும் கிடையாது.

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அல்லாஹ்வின் இந்தக் கட்டளைக்கேற்ப நமது சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் முரண்பாடு கூடாது என்று தெளிவாகக் கூறி விட்டார்கள். எனவே, இவ்விஷயத்தை முன்னிறுத்தி தம்மை ஆய்வு செய்யக்கூடியவர்களுள் முதன்மையானவராக நமது பொறுப்பாளர்கள் விளங்க வேண்டும். எங்கெல்லாம் தூரம் அதிகமோ, சில வீடுகளே இருக்குமோ, பள்ளிவாசல் அல்லது தொழுகை மையங்களுக்கான வசதிகளும் இல்லையோ அங்கு வீடுகளில் தொழுகைக்கான ஏற்பாடு செய்யலாம். செயல்ரீதியாக இது கஷ்டமில்லை. பல அஹ்மதிகள் இதனைப் பேணி வருகின்றனர். அவர்களிடம் முறைப்படியான சேவைகளும் இல்லை. எந்த செயற்குழு உறுப்பினரும் இல்லை. ஆனால், அவர்கள் தமது வீடுகளில் சுற்று வட்டாரத்தின் அஹ்மதிகளைத் திரட்டி ஜமாஅத்தான தொழுகைக்கான ஏற்பாட்டைச் செய்கின்றனர். எனவே, உணர்வு இருந்தால் எல்லாமே முடியும். நமது ஒவ்வொரு பொறுப்பாளருக்கும் தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றும் உணர்வு இருக்க வேண்டும். அது அல்லாமல் அமானிதங்களின் உரிமையை நிறைவேற்றியவர்களாக ஆக மாட்டீர்கள். இதுவே திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் சுட்டிக் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

எனவே, எப்போதும் பொறுப்பாளர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ் உண்மையான முஃமின் உடைய அடையாளமாக இதையேதான் கூறியுள்ளான். அவர்கள் தமது அமானிதங்களையும் உடன்படிக்கைகளையும் நிறைவேற்றுவார்கள். அவற்றைக் கண்காணிப்பவர்களாக இருப்பார்கள். நம்மிடம் என்ன அமானிதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனவோ, நாம் சேவை செய்வதாக உறுதிமொழி எடுத்துள்ளோமே, அதில் நமது தரப்பில் எந்த பலவீனமோ குறைபாடோ ஏற்படவில்லையே என்று பார்ப்பவர்களாக இருக்கின்றனர். ஏனெனில், இது ஒரு சாதாரண விஷயமல்ல. திருக்குர்ஆனில் அல்லாஹ் இதனையும் கூறியுள்ளான். إِنَّ الْعَهْدَ كَانَ مَسْئُولًا – ஒவ்வொரு உடன்படிக்கை குறித்தும் ஒருநாள் இல்லா விட்டாலும் ஒரு நாளில் நீங்கள் பதில் சொல்ல வேண்டியது வரும் **(17:35)**. இந்த இபாதத் ஒரு அடிப்படையான விஷயமாகும். இபாதத் – இறை வணக்கம் மனிதப் படைப்பின் அடிப்படை விஷயமாகும். நாம் அதன் உரிமையை நிறைவேற்றியே ஆக வேண்டும். அதில் சோம்பல் காட்டுவது குறிப்பாக பொறுப்பாளர்களிடம் கூடவே கூடாது. உண்மையான முஃமின்களிடமும் அது கண்டிப்பாக இருக்கவே கூடாது. இது தவிரவும் சில விஷயங்கள் உள்ளன. அவற்றையும் பொறுப்பாளர்கள் குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். மக்களின் உரிமைகளை நிறைவேற்றுவது மற்றும் பொறுப்பாளர்கள் ஜமாஅத் மக்களுடன் நடந்து கொள்ளும் விதத்துடன் தொடர்புடையவையாகும். இவ்வாறு இந்த விஷயங்கள் பொறுப்பாளர்களின் உடன்படிக்கையுடனும் தொடர்புடையவையாகும்.

எந்தப் பொறுப்பாளரும் அதிகாரி என்ற கண்ணோட்டத்திலோ அல்லது அதிகாரி ஆக்கப்படுவார் என்ற கண்ணோட்டத்திலோ தொண்டுக்காக நியமிக்கப்படுவதில்லை. மாறாக, இஸ்லாத்தில் பொறுப்பாளர்கள் பற்றிய கண்ணோட்டமோ முற்றிலும் மாறுபட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை இவ்வாறு கூறியுள்ளார்கள். சமுதாயத்தின் தலைவர் அதன் தொண்டரே ஆவார். (கன்ஸுல் உம்மால்)

எனவே, பொறுப்பாளர் மக்களின் விவகாரங்களில் தனது அமானிதத்தை நிறைவேற்றுவது என்பது சமுதாயத்தின் ஒரு சேவகராக ஆகி இருப்பதேயாகும். மனிதனிடம் தியாகத்தின் அடிப்படை உருவாகும்போது இந்த நிலை உருவாகும். அவரிடம் எளிமையும் பணிவும்

உருவாக வேண்டும். அவருடைய பொறுமையின் தகுதி பிறரை விட உயர்வானதாக இருக்க வேண்டும். சில நேரங்களில் பொறுப்பாளர்களுக்கு சில பேச்சுக்களைக் கேட்க வேண்டியது வருகிறது. கேட்க வேண்டியது வந்தாலும் கேட்க வேண்டும். இதனை பொறுப்பாளர்கள் தாமே ஆய்வு செய்ய முடியும். அவர்களின் சகிப்புத்தன்மையின் அளவுகோல் எவ்வளவு உயர்வாக உள்ளது ? எந்த அளவு உள்ளது ? அவர்களின் பணிவின் நிலை எப்படி உள்ளது? என்பதை ஆய்வு செய்ய முடியும்.

சில வேளைகளில் சில பொறுப்பாளர்களின் விவகாரங்கள் நம்முன் வருகின்றன. அவர்களிடம் சகிப்புத் தன்மை அறவே இருப்பதில்லை. எவராவது ஒருவர் மரியாதை குறைவாக நடந்து கொண்டால் உடனே அவர்களும் ஏக வசனத்தில் பதில் கூற ஆரம்பித்து விடுகின்றனர். ஒரு சாதாரண மனிதர் மரியாதை குறைவாக நடந்தால் அதனால் பெரிய பாதிப்பு ஏற்படப் போவதில்லை. இவர் தீய ஒழுக்கமுடையவர் அல்லது இவரது ஒழுக்க நிலை வீழ்ச்சி அடைந்துள்ளது என்று மக்கள் கூறுவர். ஆனால், மக்களுக்கு முன்னால் பொறுப்பாளர்களின் வாயிலிருந்து தவறான வார்த்தை வந்து விட்டால் பொறுப்பாளரின் கண்ணியமும் மரியாதையும் பாதிக்கப்பட்டு விடும். அத்துடன் ஜமாஅத்தின் நபர்களிடமும் அந்த தாக்கம் ஏற்படும். ஜமாஅத்திற்கென்று இருக்க வேண்டிய மரியாதை, எந்தத் தரத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை பார்க்க விரும்பினார்களோ அதில் ஏதேனும் இது போன்ற ஒரு சம்பவம் நடைபெற்று விட்டால் ஜமாஅத்திற்கு அவப்பெயர் ஏற்பட்டு விடும். ஏற்பட முடியும். இத்தகைய உதாரணங்கள் சில இடங்களில் காணக் கிடைக்கின்றன. பள்ளிவாயிலிலேயே சண்டை சச்சரவுகள் ஆரம்பமாகி விடுகின்றன. அவை குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மீது மிகவும் தீய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அல்லாஹ் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறான்? தியாகத்தின் உயரிய முன்மாதிரியை நிலைநாட்டுபவர்களை அல்லாஹ் எவ்வாறு குறிப்பிடுகிறான் என்பதைப் பற்றி ஓரிடத்தில் கூறுகின்றான்:

وَيُؤْثِرُوْنَ عَلٰٓى اَنْفُسِهِمْ – முஃமின் என்பவர் தனது மார்க்க சகோதரர்களுக்கு தன்னை விட முன்னுரிமை தருபவராக இருக்கிறார் **(59:10)**. அன்ஸார் முஹாஜிர்களுக்காக அத்தகைய முன்மாதிரியைக் காட்டினர். இதுவே நமக்கு ஒரு முன்மாதிரியாகும். தமது நஃப்ஸை விட

முன்னுரிமை தருவது என்பது அசாதாரணமான விஷயமாகும். மிகப் பெரிய விஷயமாகும். சில வேளை ஒருவருக்கு தர வேண்டிய உரிமையைக் கூட முழுமையாகத் கொடுப்பதில்லை. மக்களின் சில விவகாரங்கள் பொறுப்பாளர்களிடம் வருகின்றன அல்லது தலைமையகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என்பதற்காக சில விவகாரங்களை அனுப்புகின்றனர். அல்லது தலைமையத்திலிருந்து அறிக்கைக்காக சில விவகாரங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றது. அப்போது மிகவும் கவனம் குறைவுடன் அறிக்கை அனுப்பப்படுகிறது. சரியாக ஆய்வு செய்யப்படுவதில்லை. அறிக்கை அனுப்பப்பட்டு விடுகிறது அல்லது தேவை உடையவர்களின் விண்ணப்பங்கள் ஆறப்போடப்படுகின்றன. அதனால் தேவை உடையவர்களின் தேவை குறித்த காலத்தில் நிறைவேறாததால் தேவை உடையவர் நஷ்டப்படுகிறார் அல்லது சிரமத்தை சகித்துக் கொள்ள வேண்டியது வருகிறது. சில பொறுப்பாளர்கள் தமது வேலைப்பளுவைக் காரணம் காட்டுகின்றனர். சிலரிடமும் எந்தக் காரணமும் இருப்பதில்லை. வெறும் கவனமின்மைதான் காணப்படுகின்றது. அவர்களின் சொந்த விவகாரங்களிலோ அல்லது அவர்களது உறவினர்களின் விவகாரங்களிலோ அவர்களின் முன்னுரிமையே வேறாக இருக்கின்றது.

எனவே, உண்மையான சேவை உணர்வு, தியாக உணர்வு, தமது அமானிதத்தின் உரிமையைச் சரியாக நிறைவேற்றுவது இவைதான் பிறருக்காக ஒரு கவலையுடன் பணி செய்ய வைக்கிறது. இந்த தியாகத்தின் அடிப்படை மற்றவரின் கஷ்டத்தை தனது கஷ்டமாக நினைக்க வைக்கிறது. அதனால் ஜமாஅத்தின் தியாகத்தின் தரமும் அதிகரிக்கிறது. ஒருவர் மற்றவரின் உரிமையைப் அபகரிப்பதற்கு பதிலாக பிறரின் உரிமையைத் தருவதன் பக்கம் கவனம் பிறக்கும். உரிமையை பெறுவதற்கு பதிலாக உரிமையை வழங்கக்கூடிய உணர்வும், தியாக உணர்வும் தோன்றி விட்டால்தான் உலகில் அமைதி நிலைபெற முடியும் என நாம் அன்னியர் முன்பு கூறுகிறோம். ஆனால் நமக்குள் இந்த தரம் இல்லை எனில் அல்லாஹ்வுக்கு பிடிக்காத வேலையைச் செய்பவர்களாகி விடுவோம்.

பிறகு இன்னொரு பண்பு குறிப்பாக பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டும். அது பணிவு ஆகும். அல்லாஹ் ரஹ்மானுடைய அடியார்களுக்கு இந்த அடையாளத்தைக் கூறுகிறான். يَمْشُوْنَ عَلَى الْأَرْضِ هَوْنًا – அவர்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள் (25:64). இதற்கும் உயரிய உதாரணம் நமது

பொறுப்பாளர்களிடம் காணப்பட வேண்டும். ஒருவரிடம் எவ்வளவு பெரிய பொறுப்பு இருந்தாலும் அந்த அளவுக்கு சேவையின் உணர்வுடன் மக்களுடன் சந்திக்கவும் பணிவு காட்டவும் வேண்டும். அதுவே பெருந்தன்மையாகும். மக்கள் பார்க்கவும் செய்வார்கள். உணரவும் செய்கிறார்கள். பொறுப்பாளர்களின் நடைமுறை எவ்வாறு இருக்கிறது? என்று பார்க்கிறார்கள். சில வேளையில் மக்கள் எனக்கு எழுதவும் செய்கிறார்கள். இன்ன பொறுப்பாளரின் நடைமுறை இவ்வாறிருந்தது. ஆனால் இன்று எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்த பொறுப்பாளர் இப்போது எனக்கு ஸலாம் சொல்வது மட்டுமின்றி நலம் விசாரிக்கவும் செய்தார். நல்ல முறையில் நடந்து கொண்டார். அவரது நடைமுறையைப் பார்த்து எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது என எழுதுகின்றனர். இதிலிருந்து அந்தப் பொறுப்பாளரின் பெருந்தன்மை வெளிப்பட்டது.

எனவே, பெரும்பாலான ஜமாஅத் அன்பர்கள் பொறுப்பாளர்களின் நேசம், மென்மை, அனுதாபம் ஆகிய நடைமுறைகளில் மகிழ்ச்சி அடைந்து எல்லாத் தியாகங்களுக்கும் ஆயத்தமாகி விடுகின்றனர். ஒரு பொறுப்பாளரின் உள்ளத்தில் தனது பொறுப்பின் காரணமாக ஏதாவது பெருமை உள்ளத்தில் தோன்றினால், அகம்பாவம் தோன்றினால் அத்தகையவர் நினைவில் கொள்ள வேண்டும். அது அல்லாஹ்வை விட்டும் அவரை தூர விலக்கி விடுகிறது. மனிதன் இறைவனை விட்டு விலகி விட்டால் பிறகு பணியில் பரக்கத் இருக்காது. மார்க்கத்தின் பணி முழுக்க முழுக்க இறை திருப்தி பெறுவதற்காகவேயாகும். இறைவனது திருப்தியே கிடைக்காத போது அத்தகைய மனிதர் ஜமாஅத்திற்கு பயனளிப்பவராக ஆகாமல் ஜமாஅத்திற்கு நஷ்டம் விளைவிப்பவராகப் ஆகி விடுகிறார். எனவே, எப்போதும் பொறுப்பாளர்கள் குறிப்பாக இந்த அடிப்படையில் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். தம்மிடம் பணிவு இருக்கிறதா? இல்லையா? இருக்கிறது என்றால் எந்த அளவுக்கு இருக்கிறது?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: எவ்வளவு அதிகமாக எளிமையையும் பணிவையும் ஒருவர் மேற்கொள்வாரோ அந்த அளவுக்கு அல்லாஹ் அவருக்கு உயர் தகுதியை வழங்குகின்றான்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலா வல் ஆதாப். பாபு இஸ்திஜாபில் அஃப்வி வத்தவாமுஃ ஹதீஸ் எண் : 6487)

எனவே, ஒவ்வொரு பொறுப்பாளரும் நினைவில் கொள்ள வேண்டும். அவருக்கு அல்லாஹ் ஜமாஅத்திற்கு தொண்டு செய்ய வாய்ப்பு தந்திருந்தால் அது இறைவனின் பேருபகாரமாகும். அந்த பேருபகாரத்திற்கு நன்றி

செலுத்துவது மிகவும் அதிகமான பணிவும் அடக்கமும் உருவாவதாகும். பணிவும் அடக்கமும் மேலும் உருவாகாவிட்டால் அல்லாஹ்வின் கருணைக்கு நன்றி செலுத்த முடியாது. பெரும்பாலும் தெரிய வருகிறது. சிலர் பொதுவான நிலைகளில் சந்திக்கும் போது மிகவும் பணிவைக் காட்டுகிறார்கள். மக்களிடமும் சரியான முறையில் சந்திப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால் தனக்கு கீழுள்ளவருடன் அல்லது சாதாரண நபருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் உடனே அவர்களது அதிகார மனப்பான்மை விழித்துக் கொள்கிறது. தாம் பெரும் பொறுப்பாளர் எனும் உணர்வு தமது கீழுள்ளவரிடம் அகம்பாவமான நடவடிக்கையை வெளிப்பட வைக்கிறது. ஒருவர் ஆமாம் போடும் வரையும் முரண்படாதவரையும் பணிவு காட்டுவதற்குப் பெயர் பணிவல்ல. அது செயற்கையான பணிவாகும்.

அசல் நிலை எப்போது வெளிப்படும் எனில் முரண்பட்ட கருத்து இருக்கும் போது அல்லது கீழுள்ளவர் தமது விருப்பத்திற்கு மாற்றமான பேச்சு பேசும் போது பிறகும் கூட நீதியில் நிலைநின்றவாறு அந்தக் கருத்தை நன்றாக ஆய்வு செய்து தீர்ப்பளிக்கும் போது தான் வெளிப்படும். மேலும் அந்தப் பணிவுடன் உயரிய தைரியமும் வெளிப்படும். இவை நடக்கும் போது அந்தப் பணிவு உண்மையான பணிவு என்று அழைக்கப்படும். எப்போதும் பொறுப்பாளர்கள் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையை முன்னிறுத்த வேண்டும். அதாவது, وَلَا تُصَعِّرْ خَدَّكَ لِلنَّاسِ وَلَا تَمْشِ فِي الْأَرْضِ مَرَحًا உனது கன்னங்களை மக்களின் முன் கர்வத்தால் பொங்கச் செய்யாதே! பூமியில் ஆணவத்துடன் நடக்காதே!

கருத்து வேறுபாடுகள் பற்றி குறிப்பிட்டேன். அது சம்பந்தமாக இதுவும் கூறுகிறேன். ஜமாஅத்தின் அமீருக்கு செயற்குழுவின் கருத்தை மறுத்து தனது கருத்தின்படி முடிவெடுக்க சந்தேகமின்றி ஜமாஅத்தின் விதிமுறைகள் அனுமதி அளிக்கிறது தான். ஆனால், எல்லாரையும் ஒன்றாக அழைத்துச் செல்வதற்கு எப்போதும் முயற்சி செய்ய வேண்டும். ஆலோசனைகளின்படியும் பெரும்பாலாரின் கருத்துப்படியும் முடிவெடுக்க வேண்டும்; பணி செய்ய வேண்டும். சில இடங்களில் அமீர்மார்கள் இந்த உரிமையை அதிகமாகப் பயன்படுத்தத் தொடங்கி விடுகின்றனர். இந்த உரிமை மிக மிக இன்றியமையாத சூழலில்தான் பயன்படுத்த வேண்டும். ஜமாஅத்திற்கு இது நன்மை என்று தெரியும் போது பிறகு செயற்குழுவிற்கு

அதனை தெளிவுபடுத்தவும் வேண்டும். ஜமாஅத்தின் பரந்த நலனை முன்னிறுத்தியவாறு முடிவு இருக்க வேண்டும். அதற்காக துஆவுடன் அல்லாஹ்விடம் உதவியும் தேட வேண்டும். தமது அறிவை மட்டும் நம்ப வேண்டாம். தெளிவு பெறுங்கள். செயற்குழுவின் கருத்தை மறுத்து விட்டு தனது கருத்தின்படி முடிவெடுக்க ஜமாஅத் தலைவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நேஷனல் சதராக இருந்தாலும், அவர்களும் செயற்குழுவின் ஆலோசனைளை நிராகரித்து விட்டு தமது கருத்திற்கேற்ப முடிவு செய்ய முடியாது.

தத்தமது செயல் வட்டத்தைப் புரிந்து கொள்வதற்கு பொறுப்பாளர்கள் ஜமாஅத்தின் விதிமுறைகளை படித்து புரிவது அவசியமாகும். விதிமுறைகளின்படி செயல்படுவீர்கள் எனில் செயற்குழுக்குள்ளும் ஜமாஅத் நபர்களுக்கும் நிம்மதியின்மையை உருவாக்குகிற சின்னச்சின்ன விவகாரங்கள் தோன்றாது. பிறகு பொறுப்பாளர்களுக்கு இன்னொரு சிறப்புத்தன்மையும் இருக்க வேண்டும். அது என்னவென்றால், ஜமாஅத் நபர்களுடன் நல்ல முறையில் நடக்க வேண்டும். ஜமாஅத்தின் பெரும்பாலான பணிகள் தன்னார்வப் பணிகளாக இருக்கின்றன. ஜமாஅத் மக்கள் ஜமாஅத்துகளின் பணிகளுக்காக நேரத்தை தருகிறார்கள். ஜமாஅத் பணிகளுக்காக நேரம் தரக் காரணம் அவர்கள் இறை திருப்தியை விரும்புகிறார்கள். அவர்கள் நேரம் தரக் காரணம் அவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பும் பிரியம் இருக்கிறது. எனவே, பொறுப்பாளர்களும் கூட பணி செய்பவர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். இதுவே அல்லாஹ்வின் கட்டளையும் ஆகும்.

பிறகு இந்த நல்லொழுக்கத்துடன் தமது உதவியாளர்கள் மற்றும் கீழுள்ளவர்களுக்குப் பணியைக் கற்பிக்கவும் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் ஜமாஅத் பணியைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு எப்போதும் தொண்டர்கள் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஜமாஅத் பணிகளை அல்லாஹ் நடத்துகிறான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லைதான். ஆயினும், வேலையில் அனுபவமுள்ள அதிகாரிகள் மற்றும் பொறுப்பாளர்கள் பணி செய்யக்கூடிய மற்றோர் அணியை ஆயத்தம் செய்வதால் இந்த நற்செயலின் காரணமாக அவர்களுக்கு நற்கூலி கிடைக்கும்.

அல்லாஹ்வின் அருளால் எனக்கோ அல்லது எனக்கு முன் சென்ற கலீஃபாக்களுக்கோ ஜமாஅத் பணி எவ்வாறு நடக்கும் என்ற கவலை ஏற்பட்டதில்லை. இறைவனது வாக்குறுதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருக்கிறது. இன்ஷா அல்லாஹ் அவன் பணி செய்யக் கூடிய கலப்பற்ற தன்மை உடையவர்களை வழங்கிக் கொண்டிருப்பான்.

ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களது காலத்தில் ஒரு பொறுப்பாளருக்கு எனது திறமையாலும் எனது கடின உழைப்பாலும்தான் சந்தாவின் அமைப்பு மிகவும் சிறப்பாக நடக்கின்றது என்ற ஓர் எண்ணம் இருந்தது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு இது தெரிய வந்தபோது அம்மனிதரை அப்பணியிலிருந்து அகற்றி விட்டு வேறு ஒருவரை நியமித்தார்கள். அவருக்கு நிதி விவகாரங்களில் அடிச்சுவடு கூட தெரியாது. ஏனென்றால் இது அல்லாஹ்வின் பணியாகும். காலத்தின் கலீஃபாவுடன் அல்லாஹ்வின் நடைமுறையை தெரியாதிருந்த அந்த புதிய அதிகாரி மூலம் அந்த பணியில் எந்த அளவு அருள் ஏற்பட்டது என்றால் அதற்கு முன்பு கற்பனை செய்து கூட பார்த்திராத வளர்ச்சி ஏற்பட்டது.

ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கும், ஜமாஅத் தொண்டர்களுக்கும் அல்லாஹ் வாய்ப்பு வழங்குகிறான். வாழ்வை அர்ப்பணித்தவருக்கு அல்லாஹ் வாய்ப்பினை வழங்குகிறான். அவர்கள் ஜமாஅத்திற்கும் மார்க்கத்திற்கும் பணி செய்து அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாக வாய்ப்பினை வழங்குகிறான். ஏனென்றால் பணியை இறைவன் தானேதான் செய்கின்றான். அது அவனது வாக்குறுதியாகும். எனவே, எவருடைய உள்ளத்திலும் எனது அனுபவம், எனது அறிவுதான் ஜமாஅத் பணிகளை நடத்திக் கொண்டு செல்கிறது என்ற எண்ணம் வர வேண்டாம் அல்லது எனது அனுபவம் தான் ஜமாஅத் பணிகளை நடத்திச் செல்ல முடியும் என்றும் எண்ணம் வர வேண்டாம். ஜமாஅத் பணிகளை இறைவனின் அருளே நடத்திக் கொண்டு செல்கிறது.

நமது பல பலவீனங்கள், குறைகள் எத்தகையது எனில் இது உலகியல் பணியாக இருந்தால் பரக்கத் ஏற்படவே முடியாது. நல்ல விளைவு ஏற்படவே முடியாது. ஆனால், அல்லாஹ் திரையிட்டு மறைக்கிறான். மலக்குகள் மூலமாக உதவி செய்கிறான். தப்லீக் பணிகளிலும் உதாரணமாக, இந்த

மேற்கத்திய நாட்டில் கூட இங்கு பிறந்து வளர்ந்த சேவை செய்யும் இளைஞர்களை அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான். அவர்கள் சுயமா மார்க்க அறிவைக் கற்றுக் கொண்டு அஹ்மதிய்யத்தின் எதிரிகளிடம் எந்த அளவுக்கு வாயை அடைக்கும் பதில் தருகிறார்கள் எனில் மனிதன் வியந்து போகிறான். பிறகு பெரும்பாலான இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பதிலால் எதிரிகள் தப்பி ஓடுவதைத் தவிர வேறு வழியே இருப்பதில்லை. எனவே, பொறுப்பாளர்கள் மார்க்க சேவைக்கான வாய்ப்பை ஓர் இறை அருளாகக் கருதுங்கள். அது அல்லாமல் தமது அனுபவம், திறமை அல்லது தகுதியை காரணம் என்று நினைக்காதீர்.

பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டிய இன்னொரு குணம் இனிய குணமாகும். மலர்ந்த முகத்துடன் மக்களை சந்தியுங்கள் அல்லாஹ் கூறுகிறான்: وَقُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا –மக்களுடன் மென்மை மற்றும் நற்குணத்துடன் பழகுங்கள் (2:84). இதுவும் ஓர் அடிப்படை நல்லொழுக்கமாகும். பொறுப்பாளர்களிடம் இது மிகவும் அதிகமாக இருக்க வேண்டும். தமது கீழுள்ளவர்களிடம் பணி செய்பவர்களுடன் எப்போது பேசிப் பழகினாலும் மற்றவர்களிடம் பேசினாலும் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் உயர்ந்த நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். சில நேரம் நிர்வாக விவகாரங்களின் காரணமாக கடுமையாக பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகின்றது. ஆனால், இது மிகவும் இன்றியமையாத ஒரு நடவடிக்கையாகும். ஒருவருக்கு அன்புடன் புரிய வைக்க முடியும் என்றால் பொறுப்பில் உள்ளவர்களுக்கு நாங்கள் உங்கள் மீது அனுதாபம் உள்ளவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்தி விட்டால் **99** சதவிகிதம் பேர் புரிந்து கொள்கிறார்கள். இவர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பு இருப்பதனால் ஒத்துழைக்கத் தயாராகி விடுகின்றனர்.

ஆனால், மிகவும் முக்கியமான பெரிய நிபந்தனையாவது மக்களிடம் இந்தப் பொறுப்பாளர் நம்மீது அனுதாபம் உடையவர் என்ற உணர்வை உருவாக்கி விட்டால் இது நடைபெறும். மக்களிடம் மென்மையுடன் பேசுங்கள். தன் பக்க நியாயத்தை எடுத்துரைக்க வாய்ப்பே தராத அளவுக்கு ஆரம்பத்திலேயே எவருடைய தவறுகளையும் பிடித்து விடாதீர்கள். ஆயினும், தவறு செய்யும் வழக்கம் உள்ளவர்கள் மீண்டும் மீண்டும் செய்பவர்கள், பேச்சுக்கு பேச்சு குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்பவர்கள்

இத்தகையவர்களுடன் கடுமை காட்டவும் வேண்டியதிருக்கிறது. ஆனால் அதற்கு முன் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். அத்துடன் அந்தக் கடுமை கூட சொந்த பகைமையை வெளிப்படுத்தும் வடிவம் உள்ளதாக இருக்கக் கூடாது. மாறாக, சீர்திருத்தம் ஏற்படுத்துவதற்காக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யமனுடைய ஆளுநராக தம்மால் நியமிக்கப்பட்டவரிடம் போதனை செய்தார்கள். மக்களிடம் எளிதை உருவாக்குங்கள். சிரமத்தை உருவாக்காதீர்கள். அன்பு மற்றும் மகிழ்ச்சியைப் பரப்புங்கள். வெறுப்பை வளரச் செய்யாதீர்கள்.

(முஸ்னத் அஹ்மத், தொகுதி **6** பக்கம் **638** ஹதீஸ் எண்: **19935**)

இது பொறுப்பாளர்கள் மற்றும் ஜமாஅத் நபர்களுக்கிடையில் உள்ள தொடர்பில் ஓர் அழகை உருவாக்கும் போதனையாகும். பிறகு இதன் விளைவாக ஜமாஅத் அன்பர்களுக்கிடையிலும் ஒருவர் மற்றவருடைய உணர்வைக் கருத்தில் கொள்ளும் ஆன்மா உருவாகி விடுகிறது. எனவே, பொறுப்பாளர்களுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. குறிப்பாக அமீர்மார்கள் தலைவர்கள் மற்றும் தர்பிய்யத் துறை மற்றும் தீர்ப்பு வழங்கும் துறையில் இருப்பவர்களுக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது. அவர்கள் மக்களுக்கு எளிதை ஏற்படுத்தும் வழியைப் பற்றி சிந்திக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்குள் இருந்தவாறு இவ்வழியை கடைபிடிக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைக்குள் இருந்து கொண்டு இம்முறையைக் கடைபிடிக்க வேண்டும்.

உலகவாதிகளைப் போன்று எளிதை உருவாக்குவதற்காக இறை கட்டளையை மறந்து விடுவதல்ல. நாம் ஷரீஅத்தின் வட்டத்திற்குள் இருந்தவாறு இறைவனது திருப்திக்கு முன்னுரிமை வழங்கியவாறு அடியார்களின் உரிமையையும் வழங்க வேண்டும். தமது உறுதிமொழி மற்றும் அமானிதத்தையும் பாதுகாக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று ஜமாஅத்தின் சட்ட விதிமுறைகள் சம்பந்தமான நூலை பொறுப்பாளர்கள் ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டும். தமது துறை சம்பந்தமான அறிவைப் பெற வேண்டும். ஒவ்வொருவருக்கும் தத்தமது எல்லை தெரிந்திருக்க வேண்டும். சில நேரங்களில் பொறுப்பாளர்களுக்கு தமது எல்லைகள் கூட தெரிவதில்லை. ஒரு துறை ஒரு பணியைச் செய்கிறது. ஆனால் விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களில் அது வேறு துறையைச்

சார்ந்ததாக எழுதப்பட்டுள்ளது அல்லது சில நேரங்களில் பணிகளுக்கிடையில் சில நுட்பமான வித்தியாசம் இருக்கும். அதனை ஆய்வு செய்யாமல் பிறகு இரு துறைகள் ஒருவர் மற்றவரின் எல்லையில் நுழைந்து விடுகின்றனர். கடந்த நாட்களில் எனக்கு யூ.கே –வின் செயற்குழுவுடன் சந்திப்பு இருந்தது. எனக்கு அங்கு இந்த உணர்வு ஏற்பட்டது. நுட்பமான வித்தியாசங்களைப் புரியாததன் காரணமாக தேவையற்ற விவாதங்கள் ஆரம்பமாகின்றன. விதிமுறைகளைப் படித்தால் இவ்வாறு நேரம் வீணாகாது.

உதாரணமாக, தப்லீகின் துறை தப்லீக் திட்டங்களையும் நடத்த வேண்டும். தொடர்பும் கொள்ள வேண்டும். தொடர்புகள் மூலமே தப்லீக் மேலும் வளரும். அதேபோன்று வெளி விவகாரத்துறையும் கூட தொடர்பு கொள்ள வேண்டியதுள்ளது. ஜமாஅத்தினை அறிமுகம் செய்ய வேண்டியதுள்ளது. இரண்டின் வட்டமும் தனித்தனியானவையாகும். இரண்டின் வட்டமும் தனித்தன்மையானவை. ஒன்று, தப்லீக் நோக்கத்திற்காக பணி செய்ய வேண்டியதுள்ளது. இன்னொன்று மக்கள் தொடர்புக்காக *(Public Relation)* பணி செய்ய வேண்டியதுள்ளது. தொடர்புகளை விரிவுபடுத்துவதற்காக இந்தப் பணியை செய்ய வேண்டியதுள்ளது. அசல் நோக்கம் ஜமாஅத்தின் அறிமுகமும் மார்க்கத்தின் பக்கம் வழிகாட்டுவதும் ஆகும். அதன் மூலம் உலகை இறைவன் பக்கம் கொண்டு வந்து அவர்களது உலகம் மற்றும் மறுமை இரண்டையும் சரிப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். உலகத்திற்கு அமைதியின் தற்போதைய நிலை குறித்து கவனமூட்ட வேண்டும். உலக அளவில் எந்த நற்பெயர் பெறுவதும் நமது நோக்கமல்ல. அசல் நோக்கம், இறைவனை மகிழ்ச்சிப்படுத்தி அவனது திருப்தியைப் பெறுவதாகும். துறைகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பு வழங்கி பணி செய்தால் அதன் விளைவு பல மடங்கு அதிகமாக முடியும்.

பெரும்பாலான இடங்களில் இன்னொரு விஷயம் வெளிப்படுத்தப்படுகிறது. துறைகளில் பட்ஜெட் சரியாக வரையறுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு துறைக்கும் ஆலோசனைக் கூட்டத்தில் *Pass* ஆகிற பட்ஜெட்டை வழங்க வேண்டும். அதனை செலவழிப்பதற்கு சம்பந்தப்பட்ட துறை செயலருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். ஆயினும், இன்னொன்றும் அவசியமாகும். செயலர் வருடாந்திர

திட்டத்தை செயற்குழுவில் எடுத்து வைக்க வேண்டும். பிறகு ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்திற்கேற்ப செலவு செய்யப்பட வேண்டும். பிறகு ஒவ்வொரு செயற்குழுவிலும் அப்பணிகளைக் குறித்து ஆய்வு செய்ய வேண்டும். ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களில் அல்லது பணி முறைகளில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அல்லது வளர்ச்சிக்கு ஏதாவது வழி இருப்பதாக எவருக்காவது கவனம் ஏற்பட்டு அவர் கவனமூட்டினால் அதன்படி மீண்டும் ஆய்வு செய்யப்பட வேண்டும். பிறகு அமீர்மார்கள், தலைவர்கள், செயலர்கள் ஆகியோரின் மிக முக்கியமான பணியாவது, தலைமையகத்திலிருந்து என்ன வழிகாட்டல் போகிறதோ அல்லது சுற்றறிக்கைகள் வருகிறதோ அதனை உடனே முழு கவனத்துடன் செயல்படுத்த வேண்டும். ஜமாஅத்துகள் மூலமாகவும் அதனை செயல்படுத்த வேண்டும்.

சில ஜமாஅத்துகள் பற்றி தலைமையக வழிகாட்டலின்படி முழுமையாகச் செயல்படுவதில்லை என்ற புகார்கள் வருகின்றன. ஏதாவது ஒரு வழிகாட்டல் பற்றி குறிப்பான நாட்டுக்கோ அல்லது ஜமாஅத்துக்கோ நாட்டின் நிலைகளின் காரணமாக முன்னெச்சரிக்கையாக நடந்து கெள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கும் எனில் உடனே தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு சூழ்நிலைக்கேற்ப அதில் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். இந்தப் பணி ஜமாஅத்தின் அமீர் அல்லது தலைவரின் பணியாகும். தமது அறிவை முன் நிறுத்தியவாறு அந்த வழிகாட்டலை ஒருபுறம் தூக்கி வைத்து விடுவது அல்லது செயல்படாமல் இருப்பது அல்லது தலைமையகத்திற்கு தகவல் தராமல் இருப்பது போன்றவை எவ்வகையிலும் சரியில்லை. இந்தச் செயலை எந்த அமீரோ ஜமாஅத்தின் தலைவரோ செய்தால் தலைமையகத்தைப் புறக்கணிக்கும் செயலாகக் கருதப்படும். அது குறித்து தலைமையகம் நடவடிக்கையும் எடுக்கலாம்.

மூஸிகளைப் பற்றியும் நான் கூற விரும்புவதாவது, முதலில் மூஸிகள் நினைவில் கொள்ள வேண்டும். தமது சந்தாவை முறையாக வழங்கியது சம்பந்தமான கணக்கை தாமே வைத்திருப்பது ஒவ்வொரு வஸிய்யத் செய்தவரின் பொறுப்பாகும். ஆயினும், தலைமையக அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட செயலரின் பணியும் கூட இதுவேயாகும். அவர் ஒவ்வொரு மூஸி உடைய கணக்கையும் முழுமையாக வைத்திருக்க வேண்டும்.

தேவைப்படும் போது அவர்களுக்கு நினைவூட்டவும் வேண்டும். அவர்களின் சந்தாவின் நிலை என்ன என்பதை தெரிவிக்க வேண்டும். தேசிய ஜமாஅத்தின் பணியாவது, ஜமாஅத்துகளின் செயலர்களை நன்கு பணி செய்யக்கூடியவர்களாக ஆக்குங்கள். ஒவ்வொரு மூஸியும் அவர்கள் உள்ளூர் செயலரின் தொடர்பில் இருக்க வேண்டும். சில வேளை, பார்க்கும் போது தெரிய வருகிறது. ஏதாவது ஒரு விவகாரத்தில் ஒருவரைப் பற்றி அறிக்கை கேட்கப்பட்டால் அம்மனிதர் மூஸியாக இருந்தால் இவர் இத்தனை காலங்களாக வஸிய்யத் சந்தா தரவில்லை என்று அறிக்கை கொடுக்கப்படுகிறது. வஸிய்யத் சந்தா தரா விட்டால் அவரது வஸிய்யத் மட்டும் எப்படி நிலை நிற்கும் என்று கேள்வி கேட்கப்பட்டால் பிறகு ஆய்வு செய்யும் போது தெரிய வருகிறது. மூஸி உடைய தவறு இல்லை. அவர் சந்தாவை கொடுக்கத்தான் செய்தார். ஆனால், *Record* வைத்திருப்பவர்கள், அலுவலகம் சரியான *Record* வைத்திருக்கவில்லை. அத்தகைய அறிக்கை ஒன்று, காரணமில்லாமல் மூஸியை தொந்தரவு செய்யக் காரணமாகிறது.

இரண்டாவது, ஜமாஅத் அமைப்பின் பலவீனம் பற்றிய தீய தாக்கம் ஏற்படுகிறது. இப்போது மிகத் துல்லியமாக கணக்கு வழக்குகளை பராமரிக்கும் ஏற்பாடுகள் உருவாகி விட்டன. நல்ல *Systematic* முறைகள், *Computer* கள் எல்லாம் இருக்கின்றன. அத்தகைய தவறு ஏற்படவே கூடாது. ஒவ்வொரு நாட்டின் வஸிய்யத் செயலர், நிதிச் செயலர் தமது நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜமாஅத்தின் சம்பந்தப்பட்ட செயலரை செயற்துடிப்புள்ளவராக்க வேண்டும். ஜமாஅத்தின் அமீர்மார்கள் அவ்வப்போது ஆய்வு செய்து கொண்டிருக்க வேண்டியது அவர்களின் பணியாகும். வெறுமனே சந்தாவைத் திரட்டுவதும் அறிக்கை தருவது மட்டும் அவர்களின் பணியல்ல. மாறாக, இந்த அமைப்பை நம்பத்தகுந்ததாக ஆக்குவதும் தலைமையக ஜமாஅத் அமைப்பையும் உள்ளூர் ஜமாஅத் அமைப்பையும் உறுதியாக ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக உருவாக்குவதும் அமீர்மார்களின் பணியாகும்.

அதுபோன்று முபல்லிக்குகள் மற்றும் முரப்பிமார்கள் தொடர்பாக ஒரு விஷயம் கூற விரும்புகிறேன். சில இடங்களில் முறைப்படி முபல்லிக் மற்றும் முரப்பிகளின் மீட்டிங் நடப்பதில்லை. முபல்லிக் இன்சார்ஜ்கள் இதற்குப் பொறுப்பாளிகளாவர். இந்த மீட்டிங்குகள் முறைப்படி மாதந்தோறும் நடக்க

வேண்டும். ஜமாஅத்தின் தர்பிய்யத் மற்றும் தப்லீக் பணிகளின் ஆய்வு நடை பெற வேண்டும். சிறந்த பணிகளை ஒருவர் செய்திருக்கும்போது அது குறித்து பேச வேண்டும். சிறந்த பணிக்காக மேற்கொள்ளப்பட்ட வழிமுறையை மற்றவரும் செய்து பயனடைய முயற்சி செய்ய வேண்டும். அதனைப் போன்று ஜமாஅத் செயலர்கள் ஜமாஅத்திற்கு வழிகாட்டல் வழங்குகின்றனர் அல்லது தலைமையக வழிகாட்டலுக்கேற்ப ஜமாஅத்துகளுக்கு வழிகாட்டல்கள் அனுப்பட்டுள்ளன என்றால் அதுபற்றியும் அறிக்கை கொடுங்கள். முரப்பிமார்கள் இதனையும் பாருங்கள்.

ஒவ்வொரு ஜமாஅத்திலும் இவ்விஷயத்தில் எவ்வளவு வேலை நடைபெற்றுள்ளது என்று பாருங்கள். எங்கு செயலர்கள் செயற்துடிப்புடன் இல்லையோ குறிப்பாக தப்லீக், தர்பிய்யத் மற்றும் பொருள் தியாக விவகாரங்களில் அவ்வாறு இருந்தால் முரப்பி மற்றும் முபல்லிக்குகள் அவர்களுக்கு கவனமூட்டுங்கள். எல்லாப் பொறுப்பாளர்களுக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக! வரக்கூடிய **3** ஆண்டுகளுக்கு அவர்களுக்கு அல்லாஹ் தொண்டு செய்ய வாய்ப்பு தந்துள்ளான். அதில் அவர்கள் அதிகமதிகமாக எல்லா திறமைகளையும் பயன்படுத்தியவாறு பணி செய்யட்டுமாக! தமது ஒவ்வொரு சொல் செயல் மூலம் ஜமாஅத்திற்கு ஒரு முன்மாதிரியாக விளங்குவார்களாக!